

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி விக்கிரவாண்டி வட்டம் வாக்கூர் அருகே உள்ள எரிச்சனாம்பாளையம் கிராமத்தில் சாலை விபத்தில் பலியான காவலர் குடும்பத்திற்கு ரூ.25 இலட்சம் நிதியுதவிக்கான காசோலை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் சி பழனி, மாவட்ட எஸ்.பி தீபக் ஸ்வாச் , சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் ஜெய.ரவிதுரை, ஒன்றிய குழு தலைவர் சங்கீத அரசி, ரவி துரை உள்ளிட்ட கழகத்தினர், அரசுத் துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

# 10 லட்சம் குழந்தைகளை மீட்டெடுத்த திராவிட மாடல் அரசு!

முதல் பக்கத் தொடர்ச்சி

★ குறைபாடு குழந்தைகளுக்கு நியூட்ரீஷியன் கிட்

பெரியவர்களை ஒப்பிடும் போது குழந்தைகளுக்கு அவ்வளவு விரைவாக எடை குறையாது அல்லது அதிகரிக்காது. ஆனால் உங்கள் குழந்தைக்கு மால் நியூட்ரீஷியன் என்ற ஊட்டச்சத்து குறைபாடு இருந்தால், குழந்தை எடை குறைந்து மெலிந்து, சில ஊட்டச்சத்துக்கள் இல்லாமல் இருந்தால் உடல் பருமனாகவும், விரைவாக உடல் எடையும் அதிகரிக்கும். குழந்தை களுக்கு அவ்வப்போது காய்ச்சல், சளி ஆகியயை தோன்றும்.

வளரும் குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்தி பாக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுகளை எதிர்த்து செயல்படும் பொழுது உடல் ஒரு சில அறிகுறிகளின் மூலம் வெளிப்படுத்தும். ஆனால் குழந்தைக்கு அடிக்கடி உடல்நலக் குறைபாடு ஏற்படுகிறது என்றால் அவர்களால் நோய் பாதிப்பை எதிர்த்து போராடும் அளவுக்கு போதிய ஊட்டச்சத்து கிடைப்பதில்லை என்று பொருள். இதை நிவர்த்தி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி துறை சார்பில் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு நியூட்ரீஷியன் கிட் இலவசமாக வழங்கப்படுகிறது. அதில் ஊட்டச்சத்து அதிகமாக உள்ள உணவு பொருட்கள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

★ இந்தியாவில் 68 சதவீதம் குழந்தைகள் 5 வயதிற்கு முன்பே இறக்கின்றனர் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

★ தமிழகத்தில் மொத்தம் 99 லட்சத்து 5 ஆயிரத்து 289 குழந்தைகள் உள்ளனர். இதில் 10 லட்சம் குழந்தை களுக்கு பல்வேறு குறைபாடுகள் இருப்பது சோதனையில் கண்டறியப்பட்டது.

★ குழந்தைகளுக்கு பிறவி கோளாறு, ஊட்டச்சத்து குறைபாடு எடையின்மை, உயரமின்மை மற்றும் மெலிவுத்தன்மை, இருதய பாதிப்பு, மூளை வளர்ச்சி பாதிப்பு, மன பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

★ ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு உண்பதற்கு தயாராக உள்ள சிகிச்சை உணவு 8 வாரங்களுக்கு அளிக்க ரூ.18.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ ஊட்டச்சத்து குறைபாடுடைய 06 மாதக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூ.8.68 கோடி செலவில் சத்துப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

★ 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை தமிழகத்தில் ஊட்டச்சத்து உறுதி செய்யும் திட்டத்தின் கீழ் 6 வயது வரையுள்ள மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 10.26 லட்சம் குழந்தைகள் ஆர்எஸ்பிகே குழுவினரால் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டனர். அதில் 2 லட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பதிக்கப்பட்டு இருந்தனர். அதில் 43,200 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை உட்பட வெவ்வேறு மருத்துவச் சிகிச்சைகள் மாவட்ட மருத்துவமனைகளில் அளிக்கப்பட்டது.

ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு உண்பதற்கு தயாராக உள்ள சிகிச்சை உணவு 8 வாரங்களுக்கு அளிக்க ரூ.18.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையினால் ஊட்டச்சத்து குறைபாடுடைய 06 மாதக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூ.8.68 கோடி செலவில் சத்துப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. 6 மாதம் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 92,015 குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை உணவு அளிக்கப்பட்டதில் 61,788 (66.6%) குழந்தைகள் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

அதேபோன்று 06 மாதக் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 14,901 குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்கள் பிறப்பு கூடுதல் சத்து உட்கொண்டதினால் 13,319 (89.4%) குழந்தைகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அனைத்துக் குழந்தைகளின் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் வளர்ச்சியில் முன்னேற்றத்தினை கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் குழந்தையின் வளர்ச்சியில் குறிப்பாக முதல் 6 மாதத்தில் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றி மிகுந்த விழிப்புணர் வினை உருவாக்கியுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பிறவியிலேயே கண்டறியப்பட்ட இருதய நோய், பிறவியிலேயே கண்டறியப்பட்ட மூளை வளர்ச்சி குறைபாடு, பிறவி பார்வை குறைபாடு, பிறவி காது கேளாமை, பிறவி கால் ஊனம் போன்ற பிறவி குறைபாடுகளை உடைய 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தற்பொழுது அவர்கள் நலமாக உள்ளனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; ஒன்றிய பா.ஜ.க. அரசின் “ஆயுஷ்மான் பாரத் திட்டம்” வெறும் காகிதத்தில் மட்டுமே உள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறதே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; “ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம் “ என்று பாடினான் மகாகவி பாரதி!**

**அதையே இவர்கள், வெற்று ஆரவாரம் செய்வோம்; வீண் காகிதத் திட்டங்களையே செய்வோம் - என்று மாற்றிக் கொண்டுவிட்டார்களோ!**

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை ! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலை!

# புதுக்கோட்டை - ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## எழில் மாறன் செல்வேந்திரன் சிறப்புரை! த.சந்திரசேகரன் பங்கேற்பு !

புதுக்கோட்டை, நவ. 4 -

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத்தொகுதிதிருவரங்குளம் கிழக்கு ஒன்றியம் மற்றும் கீரமங்கலம் பேரூர் கழகங்கள் சார்பாக பாக முகவர்கள் கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் சட்டத்துறை அமைச்சர், தெற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ரகுபதி தலைமையில் கீரமங்கலம் வி.எஸ்.ஆர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் முன்னிலை வகித்தார். திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே. எஸ்.ரவி அனைவரையும் வரவேற்று பேசினார்.

இந்நிகழ்வில் கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர், ஆலங்குடி சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் எழில்மாறன் செல்வேந்திரன் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வுகளில் கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் த.சந்திரசேகரன், மாவட்டத் துணைச் செயலாளர் ஸ்ரீதேவி அண்ணாதுரை, விராலிமலை மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எம்.ஜி (எ) ராமச்சந்திரன், மாவட்ட ஆதிதிராவிட நல பிரிவு அமைப்பாளர் சர்வேயர் நடேசன் மற்றும், ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் கீரமங்கலம் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர் கே.சி. சிவக்குமார் நன்றி கூறினார்.

இதனை தொடர்ந்து மாலை 3 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி அறந்தாங்கி மேற்கு மற்றும் கிழக்கு ஒன்றியங்கள் சார்பாக பெரியளூரில் நடைபெற்ற பாக முகவர்கள் ஆலோசனை கூட்டத்திற்கு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமை தாங்கினார். அறந்தாங்கி கிழக்கு ஒன்றிய செயலாளர் எல்.குமார் (எ) துரைக் கண்ணு அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர் ஸ்ரீதேவி அண்ணாத்துரை, மாவட்ட கவுன்சிலர் சரிதா மேகராஜன் ஒன்றிய கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் நன்றி கூறினார்.

### தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க

# சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, நவ. 4 -

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பாலக்கோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிகளுக்கான பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம் இன்று (04.11.2024 -திங்கட்கிழமை) காலை 9.30 மணியளவில் காரிமங்கலம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழகத் அவைதலைவர் திரு. கே.மனோகரன்,Ex.,MLA தலைமையில், மாவட்ட கழக துணை செயலாளர் வழக்கறிஞர்.ஆ.மணி.,எம்.பி முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில விவசாய அணி துணை செயலாளரும், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன் அவர்களையும், மாநில அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளரும், அரூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் திரு.சி.செல்லதுரை அவர்களையும், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் திரு.எவரெஸ்ட்.என். நரேஷ்குமார் அவர்களையும் அறிமுகப்படுத்த உள்ளார்கள். அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. வாக்காளர் சேர்த்தல் நீக்கல் 2. வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) மற்றும் வாக்குச்சாவடி குழு(BLC) சரிபார்த்தல்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஆ.இராசா.எம்.பி - அமைச்சர் சா.சி.சிவசங்கர்- தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்பு!

# பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், நவ. 4 -

பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் 05.11.2024,(செவ்வாய்க் கிழமை) காலை 10.00 மணியளவில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்(எனது) தலைமையில், கே.என்.அருண்நேரு. எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர். இதில்

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்,

குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

அது சமயம், மாநில நிர்வாகிகள், தலைமை

செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள்,

மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்!

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெரம்பலூர் வருகை!

தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம்.

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க.

# நகர, ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!

உதகை, நவ. 4 -

நீலகிரி மாவட்டக்கழகச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இன்று ( 4.11.2024 - திங்கட்கிழமை) மதியம் 3 மணி அளவில் நீலகிரி மாவட்ட நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம், மாவட்ட தி.மு.க அலுவலகம்உதகைகலைஞர்அறிவாலயத்தில் அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் அவர்கள், தொகுதி சட்டமன்ற பார்வையாளர்கள் தென்றல் செல்வராஜ் (உதகை), பி.ஆர்.பரமேஸ்குமார் (கூடலூர்), மற்றும் அ.திராவிடமணி(குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. இதில் நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள்அனைவரும் தவறாது கலந்து சிறப்பி க்கு மாறு வேண்டுகிறேன்.



குறிப்பு: தாங்கள் வரும் போது, தங்களது நகரஒன்றியபேரூர் கழகத்திற்கு உட்பட்ட BLA2 (வாக்குச்சாவடி நிலை முகவர்கள்) தேவையிருப்பின் திருத்தப் பட்டியலை முறைபடுத்தி அவசியம் கொண்டுவர வேண்டுகிறேன்.

பொருள்: 1. தலைமை கழகஅறிவிப்பின்படி,முதற்கபட்டமாகஒவ்வொருBLA 2 வாக்குச்சாவடி முகவர்களையும் சட்டமன்ற தொகுதிபார்வையாளர்கள் அந்தந்த பகுதிக்கு நேரில் சென்றுசந்திப்பதற்கானஏற்பாடுகள் செய்வது முன் குறித்து.

2. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறுஅவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கோவை செல்வபுரம் சமுதாய கூடத்தில் கோவை மாநகராட்சி 76,77,78,79 வார்டுகளில் புரியும் தூய்மை பணியாளர்கள் அங்கன் வாடி ஊழியர்கள் மின்வாரிய ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து துறை ஊழியர்களுக்கும் அறுசுவை உணவு மற்றும் புத்தாடை இனிப்புகளை கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி வழங்கினார். செல்வபுரம் பகுதி திமுக செயலாளர் கேபிள் மணி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்கள் துணை மேயர் வெற்றி செல்வன் மாமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ராஜ்குமார் வசந்தாமனி மற்றும் வட்டக்கழக செயலாளர்கள் அறிவழகன் ராஜேஷ்,இப்றாகீம் மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள் பகுதிக்கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் இளைஞரணியினர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை - சத்தியமூர்த்தி பெருமாள் கோயில் குடமுழுக்குப் பணிகள்!

புதுக்கோட்டை, நவ.3-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் அமைந்துள்ள சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு சத்தியமூர்த்தி பெருமாள் திருக்கோயில் ஆகியன தொன்மை வாய்ந்த திருக்கோயில்களாகும். இவை மத்திய தொல்லியல் துறையின் கட்டுபாட்டில் இந்து சமய அறநிலையத்துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில்களில் இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் ரூ. 68 இலட்சம் மற்றும் மத்திய தொல்லியல் துறையால் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயி ல்களை புனரமைக்கும் பணிகள், கொடிமரம் புதுப்பித்தல், இடிதாங்கி அமைத்தல், மின் இணைப்புகள் புதுப்பித்தல், கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்துதல் போன்ற திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயில்களுக்கு வருகின்ற நவம்பர் 8ஆம் நாள் குடமுழுக்கு நடைபெற உள்ளது.

இந்நிலையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (01.11.2024) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், அருள்மிகு சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில் மற்றும் சத்தியமூர்த்தி பெருமாள் திருக்கோ யில் ஆகிய திருக்கோயில்களுக்கு நேரில் சென்று, அங்கு நடைபெற்று வரும் குடமுழுக்கிற்கான திருப்பணிகளை நேரில் ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது தஞ்சாவூர் மண்டல இணை ஆணையர் சி.மாரியப்பன், புதுக்கோட்டை உதவி ஆணையர் திருமதி அனிதா, மடப்புரம் திருக்கோயில் உதவி ஆணையர் கணபதி முருகன், மத்திய தொல்லியல் அலுவலர் முத்துக் குமார், திருக்கோயில் செயல் அலுவலர் முத்து ராமன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தி.மு.க இளைஞர் அணியில் மண்டலம் 7 ன் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். அருகில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, குடந்தை மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ந.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தட்சிணாமூர்த்தி, தஞ்சை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, கும்பகோணம் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அ.வெங்கடேசன், உள்ளிட்ட தஞ்சை மத்திய, தெற்கு, புதுக்கோட்டை வடக்கு தெற்கு, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை ஆகிய கழக மாவட்டங்களைச் சேர்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.